**தலைப்பு 308 – தபால் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 308 - தபால் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தபால் மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தினரதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 12,486.50 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 12,419.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 66.77 மில்லியன் அல்லது 0.53 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 12,348.50 | 12,284.17 | 64.33 | 0.52 |
| மூலதனம் | 138.00 | 135.56 | 2.44 | 1.77 |
| **மொத்தம்** | **12,486.50** | **12,419.73** | **66.77** | **0.53** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,000 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 6,578 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 93.97 சதவீதமாக இருந்தது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை / (பற்றாக்குறை) மதிப்பீட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.01.02.00 | 7,000 | 6,578.13 | (422) | (6.03) |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30801 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 750.00 | 749.72 | 640.00 | 701.58 | 2,400.00 | 1,707.51 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 7002/0000/00/0098/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 3,494.62 மில்லியனாகும்.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழுள்ள 06 வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54.35 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0038/000 | 3.08 |
| 6000/0000/00/0002/0049/000 | 0.70 |
| 6000/0000/00/0013/0039/000 | 7.65 |
| 6000/0000/00/0016/0002/000 | 10.08 |
| 6000/0000/00/0018/0009/000 | 32.75 |
| 6000/0000/00/0020/0027/000 | 0.09 |
| **மொத்தம்** | **54.35** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

தபால் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமான கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை |
| (ii) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

(அ) நிதிப்பிரமாணம் 427(2) இற்கமைய மாதந்தோறும் கட்டுநிதிக் கணக்கு திறைசேரிக் கணக்குடன் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய பணத்தில் ரூபா 70,000,000 தொகை 2017 சனவரி 05 ஆந் திகதியும், ரூபா 200,000,000 தொகை 2017 சனவரி 09 ஆந் திகதியும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வழங்கப்பட்டிருந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 340,721 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 423,852,026 தொகையான மீதிகள் தீர்க்கப்பட்டிராமையும், கட்டுநிதிக் கணக்கு மீதி பூச்சியமாகாமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணம் 371 (2) (இ) இற்கமைய குறித்த பணி நிறைவடைந்தவுடன் பெற்றுக்கொண்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய 18 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 513,330 கூட்டுத்தொகை 11 நாட்கள் முதல் 06 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(உ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் (ஆ) பிரிவிற்கமைய ஏதேனுமொரு விசேட பணியொன்றிற்காக ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக் கூடியது ரூபா 100,000 தொகையான உச்ச எல்லை வரையான செயல்நிமித்த உப கட்டுநிதியினை வழங்க முடியும் என்ற போதிலும், பணிப்பாளருக்கு (பயிற்சி) ஒரே பணிக்காக 03 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 படி ரூபா 300,000 வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இரண்டு வருடங்களை கடந்த ரூபா 4,096,704 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இற்கமைய அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொறுப்புக்கள்

(அ) நிதிப்பிரமாணம் 94(1) இற்கமைய நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்களுக்கான கடப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட கூடாத போதிலும், 11 செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்புக்களை விஞ்சி ரூபா 73,284,551 தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 6,756,461 பெறுமதியான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது தபால் தலைமையகத்தின் முத்திரைக் களஞ்சிய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 3.5 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20-01-02-00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பிக்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீட்டிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### 3.5.1 சரியான பெறுமதிகளை கணக்குகளில் காண்பிக்காமை

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 7,500,000,000 ஆன போதிலும், வருமானக் கணக்கில் அது ரூபா 8,193,650,390 ஆக ரூபா 693,650,390 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கமைய வருமானம் ரூபா 7,000,000,000 ஆக இருந்த போதிலும், வருமானக் கணக்கில் அது ரூபா 6,999,697,823 ஆக ரூபா 302,177 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.5.2 மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம்

(அ) மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 7,000,000,000 ஆன போதிலும் ரூபா 421,866,364 தொகை குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும் போது உள்ளபடியான எண்ணிக்கைகளை பயன்படுத்தாது கற்பனையான எண்ணிக்கைகள் பயன்படுத்தப்பட்டமையால், அந்தந்த விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினதும் உள்ளபடியான வருமானத்தினதும் 10 சதவீதம் முதல் 810 சதவீதம் வரையான நேர் விலகல்கள் மற்றும் 27,788 சதவீதம் வரையான மறை விலகல்கள் நிலவின.

### 3.5.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

(அ) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கைக்கமைய முறைப்படி தயாரிக்கப்பட்ட காலாண்டு வருமான அறிக்கைகள் அந்த காலப்பகுதி நிறைவடைந்த திகதி முதல் 15 நாட்களுக்குள் அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்தம்பர் 27 ஆந் திகதிய 187/2006 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய சேகரிக்கப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் மாதாந்தம் தயாரிக்கப்படும் கணக்கு அறிக்கைகளுடன், திணைக்களத்தின் புத்தகங்களுக்கமைய காண்பிக்கப்படும் பெறுமதிகளை இணக்கம் செய்யும் அறிக்கையொன்று அதற்கடுத்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்பாக அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும், திசெம்பர் மாதத்தினதும் அறிக்கைகளை சமர்ப்பித்தலின் போது 12 நாட்கள் முதல் 90 நாட்கள் வரையான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.5.4 வருமானத்திலிருந்தான மீளளிப்புக்கள்

நிதிப்பிரமாணம் 118 இற்கமைய அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்யும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,681,610 தொகைக்காக இந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5.5 தொடர்பாடல் நிலைய வருமானம்

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான தொடர்பாடல் நிலைய வருமானம் ரூபா 1.37 மில்லியனான போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 7.00 மில்லியனானமையால், வருமானம் ரூபா 5.63 மில்லியனால் அல்லது 81 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எவ்வாறெனினும் 2000 நவம்பர் 07 ஆந் திகதிய தபால் மா அதிபரின் 14/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய இலாபம் /நட்டம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்படாது தொலைத்தொடர்பு நிலையங்களின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளை கணக்கு வைக்கும் முறையொன்று

பின்பற்றப்பட்டிருந்தது. அதனால் வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் தீர்க்க ரீதியான அடிப்படையொன்றினை கொண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தபால் விற்பனை நிலைய வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது ரூபா 2,196,112 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5.6 வருமானம் வீழ்ச்சியடைதல்

தபால் திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட வருமானம், மேற்கொள்ளப்பட்ட செலவினம் ஆகியவற்றை கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2016 | 2015 | வேறுபாடு | அதிகரிப்பு/ குறைவு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வருமானம் | 6,578 | 6,710 | 132 | 1.97 |
| செலவினம் | 12,284 | 11,756 | 528 | 4.5 |
| செயற்பாட்டு பற்றாக்குறை | 5,706 | 5,045 | 661 | 13 |

(அ) முன்னைய ஆண்டிற்கான ஒட்டுமொத்த வருமானமான ரூபா 6,710 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 6,578 மில்லியன் ஆனமையால் வருமான அதிகரிப்பில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 132 மில்லியன் அல்லது 1.97 சதவீதமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வருமானம் குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்த விடயங்களிடையே விசேடமாக சந்தையுடன் தொடர்புடையதாக சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டித்தன்மை, முத்திரை வருமானம் குறைவடைதல் மற்றும் தபால் அலுவலகங்களை வலையமைப்பிற்குட்படுத்தும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தலிலுள்ள நலிவுகள் ஆகியன விசேடமான காரணங்களாக அமைந்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுப் பற்றாக்குறை 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதற்காக செயற்பாட்டு செலவினத்திலான அதிகரிப்பு தாக்கமளித்திருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட தபாலகங்களை வலையமைப்பிற்குட்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கங்களின் ஒரு நோக்கமானது தபால் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக நட்டமடைவதை தடுத்து வருமானம் மற்றும் செலவினத்தை சமனான மட்டத்தில் பேணிச் செல்வதாகும். எனினும், திணைக்களம் மீளாய்வாண்டினுள்ளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 5,706 மில்லியனாகும். அது கடந்த வருடத்தின் பற்றாக்குறைக்கு ஒப்பாக ரூபா 661 மில்லியன் அதிகரிப்பாகும்.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 30801 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இணக்கமின்மைகள்

தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கமைவான மீதி மற்றும் மாவட்ட கணக்கு அலுவலகங்களின் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றின் மீதிகள் முறையே ரூபா 1,698,646,560 மற்றும் ரூபா 1,707,336,594 ஆனமையால் ரூபா 8,690,034 ஆன வேறுபாடு நிலவியது.

(ஆ) அறவிடப்படாது காணப்படும் மீதிகள்

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாது காணப்படும் கடன் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 65,897,858 ஆகும். அந்த மீதிகளின் 05 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்படும் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,516,209 ஆகும்.

(இ) எல்லையினை விஞ்சி இடர்கடன் செலுத்துதல்

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைக்கமைய அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தக்கூடிய ஒட்டுமொத்த இடர்கடன் தொகையினை ரூபா 250,000 இற்கு மட்டுப்படுத்தியிருந்த போதிலும், 22 உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 3.7.1 உள்ளகக் கணக்காய்வு

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 89 ஆன போதிலும், 09 கணக்கு பரீட்சிப்பு உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 19 உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். இதன் காரணமாக ஆக்கபூர்வமான மற்றும் வினைதிறனாக கணக்காய்வொன்றினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போதும் 2016 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையில் 653 தபால் அலுவலகங்களில் 167 தபால் தபால் அலுவலகங்களிலும் 16 கணக்கு அலுவலகங்களில் ஒரு கணக்கு அலுவலகத்தில் மாத்திரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது உப தபால் அலுவலகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தலைமை அலுவலகத்தின் 08 பணிகள் மற்றும் 08 மத்திய தபால் பரிமாற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**3.8.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

ஏலமிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 05 வாகனங்களின் உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டிருந்தன. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதிலான தாமதங்களின் காரணமாக இந்த வாகனங்கள் நாரஹேன்பிட்டிய கராஜில் சிதைவடைந்தவாறு காணப்பட்டது.

**3.8.2 சொத்துக்களை கையேற்காமை**

(அ) 9 மாகாணங்களுக்குரிய தபால் அலுவலகங்களுக்குரிய காணிகளில் முறையாக கையேற்கப்பட்ட காணிகளின் அளவு அலகு ரீதியாக 87 ஆக காணப்பட்டதுடன், பாவனைக்கு மாத்திரம் கையேற்கப்பட்ட காணிகளின் அளவு 120 அலகுகளாகும். இது வரையிலும் கையேற்கப்படாத காணிகளின் அளவு 68 அலகுகளாகும். இந்த காணிகளின் கன அடி எவ்வளவு என இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாடெங்கிலும் உள்ள 652 தபால் அலுவலகங்கள் காணப்பட்ட போதிலும், அவற்றுள் 448 அலுவலகங்களின் உரித்து தபால் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைய 2016 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வொன்றினை மேற்கொண்டு, அந்த அறிக்கையினை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், கேகாலை, கொழும்பு வடக்கு மற்றும் தெற்கு ஆகிய தபால் அத்தியட்சகர் பிரிவுகளில் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் நிதியீட்ட செலவின செயன்முன்னேற்ற அறிக்கையினை பரீட்சிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 57 செயற்திட்டங்கள் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ii) செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாத 47 கட்டிட பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பெறுகைகள் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிராத 13 மோட்டார் சைக்கிள்கள் ரூபா 3,348,849 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) விசாரணைகளை மேற்கொள்வதிலான செயலாற்றல்

-----------------------------------------------------------------------------------------

(i) தபான விதிக் கோவையின் 11 ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.1 ஆம் உப பிரிவிற்கமைய திணைக்களத்தின் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 2,684 விசாரணைகள் காணப்பட்டதுடன் அவை 01 முதல் 18 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரியனவாகும்.

(ii) தாபான விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22:1:1 ஆம் உப பிரிவின் திருத்தமாக 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 06/2004(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய மோசடி செய்த உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டு பத்திரமொன்றினை வெளியிட்டு ஒரு வருடத்தினுள் உரிய பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒழுக்காற்று கட்டளையினை வழங்குவதற்கு ஒழுக்காற்கு உத்தியோகத்தர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறெனினும் 10 ஆரம்ப விசாரணைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு குற்றச்சாட்டு அறிக்கையினை வெளியிடுவதற்கு 01 முதல் 09 வருடங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) தாபன விதிக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் 31:11 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பணி நீக்கத்திற்கு உட்பட்டு குற்றம் சாட்டடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒழுக்காற்று கட்டளையினை வழங்குவதற்கு முன்னர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக பாரதூரமான தொகுதியில் குற்றமொன்றாக கருதப்படும் அரச நிதி மற்றும் சொத்துக்களை முறையற்ற பயன்பாட்டிற்கு உட்படுத்தியுள்ள சந்தர்ப்பங்களின் போது மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். அவ்வாறான 08 சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன், அவற்றின் நிதிப் பெறுமதி ரூபா 16 மில்லியனாகும்.

(iv) நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவாறு காணப்படும் நிதி மோசடிகள் தொடர்பிலும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மோசடிகள் தொடர்பிலும் திணைக்களம் விசாரணைகளை நடாத்தி ஒழுக்காற்றுக் கட்டளையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 9,680,690 கூட்டுத்தொகையான நிதி மோசடிகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் மூலம் அல்லது உள்ளக கணக்காய்வு பரிசோதனை அறிக்கைகளின் மூலம் மோசடிகள் அல்லது முரண்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபான விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29.1, 29.2 மற்றும் 29.3 இற்கமைய உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் உரிய ஒழுக்காற்று உத்தியோகத்தரால் கட்டாயமாக எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 189,182,368 தொகையான விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) உதவி தபால் அத்தியட்சகர் (விசாரணைகள்) அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 51 ஆகும். 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 32 பேரினையும் ஒப்பந்த அடிப்படையிலான 04 பேரினையும் கொண்டிருந்தது. நிலவும் ஊழியர் பற்றாக்குறையால் உத்தியோகத்தர்களில் 16

பேர் மாத்திரம் விசாரணை கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் மந்தமான நிலையில் மேற்கொள்ளப்படுவதற்கு இந்நிலைமை தாக்கமளித்துள்ளது என்பதும் தபால் மா அதிபரின் கருத்தாகும். எவ்வாறெனினும், தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் மிகவும் குறைவான பெறுமதியில் நிலவியது.

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

### 3.10.1 அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறையிலிருந்து விலகுதல்

(அ) பூஜாபிடிய தபால் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1(இ) பிரகாரம் கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு முன்னர் நிதியேற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல், நிலம் தொடர்பான மதிப்பாய்வு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல், கேள்வி கோரல் மற்றும் திட்டத்தினை தயாரித்தல் போன்றன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது 2015 யூன் 14 ஆந் திகதி இந்த நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது.

(ii) நிர்மாண நடவடிக்கைகள் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த நிர்மாணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் 36 சதவீதம் அல்லது ரூபா 23,502,163 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய செய்வேலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டிடங்கள் திணைக்களத்துடன் 2016 செப்தம்பர் 15 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கமைய 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி இதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 யூலை மாதம் வரையிலும் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இந்த தபால் கட்டிடம் 2016 ஆம் ஆண்டின் போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராத போதிலும் ரூபா 16,032,294 தொகையான சொத்தொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அனுராதபுரம் புதிய தபால் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்

அனுராதபுரம் தபால் அலுவலக கட்டிடத்தொகுதியினை நிர்மாணத்தல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 19 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூன்று மாடிகளைக் கொண்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 94,750,000 தொகைக்கு 16,275 கன அடி கொண்ட பூமிப்பரப்புடன் இந்த நிர்மாணம் கட்டிடங்கள் திணைக்களத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், தரைத்தளம் மற்றும் முதலாம் தளம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு 2013 நவம்பர் 10 ஆந் திகதி அலுவலக நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது.

(ii) இந்தக் கட்டிடத்தின் நிர்மாணம் ஆரம்பத்தில் மூன்று மாடிகளுக்கு அத்திவாரம் மற்றும் கொன்கீரீட் இடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் 05 மாடிகள் வரை அதிகரிக்கப்பட்டு அதற்காக ரூபா 155 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) இலங்கையின் தற்போதைய நகர அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கமைய உச்ச பொருளாதார பெறுமதியொன்றுடனான காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது எதிர்கால எதிர்பார்ப்புக்களையும் கருத்திற் கொண்டு கட்டிட நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இந்தக் கட்டிடத் தொகுதியினை திட்டமிடும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) கட்டிடத்தின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி கட்டிடங்கள் திணைக்களத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைக்கமைய பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2016 நவம்பர் 18 ஆக இருந்த போதிலும், 2017 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 07 வருடங்கள் கடந்திருந்தது.

(v) செய்வேலை அறிக்கையினை பெற்றுக்கொள்ளமல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் ரூபா 84,460,939 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.11 நட்டங்களும் இழப்புக்களும்

1984 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற பதிவழிப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடடவடிக்கை எடுக்கப்படாத நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 11,978,671 ஆகும்.

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### 3.12.1 காசுக்கட்டளை சேவைகள் கணக்கு

**காசுக்கட்டளை சேவைகள் கணக்கிணக்கக்கூற்று - 2015**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தபால் திணைக்களத்தினால் காசுக்கட்டளை கொடுக்கல் வாங்கல்களுக்குரியதான கணனி மென்பொருட்களை அறிமுகப்படுத்தி பல வருடங்கள் கடந்திருந்தது. அந்த மென்பொருளில் காணப்படும் குறைபாடுகளின் காரணமாக அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தகவல்கள் தவறானதாக இருந்தது. காசுக்கட்டளைகளை வெளியிடுதல், காசுக்கட்டளைகளை செலுத்துதல் மற்றும் காசுக்கட்டளை தரகு வருமானம் ஆகியவற்றுக்கிடையே முறையே ரூபா 826,396,815 ரூபா 832,549,569 மற்றும் ரூபா 1,547,533 தொகையான வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன.

(ii) காசுக்கட்டளைகளை வழங்குதல் மற்றும் செலுத்துதல், கணக்கு வைக்கும் போது தவறாக கணக்கு வைத்தல், தவறுதல் காரணமாக குறைவாக மற்றும் கூடுதலாக கணக்கு வைத்தல் பாரியளவில் இடம்பெற்றிருந்தது. இந்த நிலைமை தொடர்ச்சியாக

இடம்பெற்றிருந்ததுடன் அந்த நிலைமையினை தவிர்ப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2016 ஆம் ஆண்டிற்கான காசுக்கட்டளை சேவைகள் கணக்கு 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12.2 மேலதிக நேரக் கொடுப்பனவுகள்**

2015 ஆம் ஆண்டின் போது மேலதிக நேர மற்றும் விடுமுறைத் தின படிகளுக்கான செலவினம் ரூபா 640.9 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 776.6 மில்லியனாகியிருந்தது. அதற்கமைய மேலதிகநேர படிகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 121 | 87 | 34 |
| (ii) | மூன்றாம் நிலை | 147 | 54 | 93 |
| (iii) | இரண்டாம் நிலை | 8,854 | 8,045 | 809 |
| (iv) | ஆரம்ப நிலை | 17,659 | 12,696 | 175 |
| (v) | ஏனையவை - பதிலீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படை | | 4,788<br>05 | |
| | மொத்தம் | 26,781 | 25,675 | 1,111 |

(i) 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக புதிய சேவைப் பிரமாணமொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்த அடிப்படையில் 4,788 பதிலீட்டு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த பதவிக்காக நிரந்தர ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் இடமாற்றல்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மிகவும் நீண்ட காலமாக ஒரே அலுவலகத்தில் கடமையாற்றுதல் மற்றும் கணவன் மற்றும் மனைவி ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.